Registered as a
News
Paper in Ceylon
P M G No. H A
59/300 of 1953

இந்து சாதனம்

விரோதி ௵
(1889)
ஆவணி ௴ 28உ
ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜய ௵ ஆடி ௴ உ௨ உ வெள்ளிக்கிழமை (6 AUGU 1954) [இல - கஅ]

சைவம் வளர்த்த சிவபாதசுந்தரனார் நினைவு

இறை பணியில் இன்புற்ற ஏந்தல்

வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத்தில் நிகழ்ந்த நினைவுவிழா சைவப் பெரியாரின் சால்புவழி நிகழ்ந்ததென்று தலைமைவகித்த திரு. மு. ஞானப்பிரகாசம B. A. B. Sc அவர்கள் கூறி நாவலர் வழிவந்த சிவபாதசுந்தரனாரின் திருவுருவம் காரைநகரிற் பொதுவாகவும் வியாவிலிற்சிறப்பாகவும் பொருந்தியுள்ளதெனக் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பத்தில் கல்வி கற்பதற்காகப் புறமதம் புகுந்த ஒரு மாணவி, சிவபாதசுந்தரனார் சைவபோதச் செழு பொருளுணர்ச்சியாலே தாய்மதம் திரும்பி[illegible] நிகழ்ச்சி நாடகச் சொல்லா[illegible] முறையில நடந்தது.

பின்னர் திரு. கம. சி[illegible]ப்பிரகாசம் அவர்கள், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்கள் திருவாளர்கள் ஆர். நவரத்தினம் எம். ஏ., எஸ். கந்தையா முதலிய சைவப் பெரியார் பலர் சைவப்பெரியாரின் தெய்வத்தொண்டைப்பற்றிப் பேசினர்.

வித்தியாலய முகாமைக்காரரும் சைவாபிமானியுமாகிய திரு. இ. நாகலிங்கம் அவர்கள் நன்றியுரை கூறினர்.

ஆரம்பத்தில் வித்தியாலயத் தலைமை ஆசிரியர் வரவேற்புரை பகர்ந்தனர்.

திருக்கேதீச்சரத்தில்

சிறந்த சைவ சித்தாந்தியும் சிலகாலம் சைவ பரிபாலன சபை, திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை ஆகியவைகளின் தலைவராகவிருந்தவரும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமடத்துக்கு அடிகோலியவரும், அத்தலத்தில எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமானையும் சிவகாமசுந்தரியம்மையாரையும் திருவுருவங்களைத் தமது செலவில அமைப்பித்துப் பிரதிட்டை செய்தவருமாகிய ஸ்ரீமான சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் சிவபதமடைந்த ஆடி மாதத்து பூர்வபஞ்சமி சென்ற செவ்வாய்க்கிழமையாகும். அன்று இப்போது திருக்கேதீச்சரத்தில் தலவாசஞ்செய்துகொண்டிருக்கும் யாழ்ப்பாணம் ஸ்ரீ சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் அன்றகாலைப் பாலாவிப்புண்ணிய தீர்த்தத்தில் இப்பெரியார் பெயரால் சங்கற்பபூர்வமாக ஸ்நானம் செய்து தலதர்ப்பணம் செய்துள்ளார்கள் இதன்பின் 11 மணியளவில் திருக்கேதீச்சரப் பெருமானுக்கும் கௌரிநாயகி அம்மையாருக்கும் விசேட அபிஷேகம் ஆனதும் குறித்த செட்டியாரவர்கள் அர்ச்சனை வாசிக்க நடராசப் பெருமானுக்கு சகஸ்ரநாமார்ச்சனையும் அஷ்டோத்தரசதநாமார்ச்சனையும் நடத்தினர். தீபாராதனை காலத்தில் குஞ்சிதபாதத்தில் திருமாலை சாற்றி "அத்தா உன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே" என்றும் 'தில்லைத் திருநடஞ் செய்தவே இனித் தமியேற்கு அல்லைத் தீர்த்து உனது பதம் தந்தருளே" என்றும் கந்தபுராணச் செய்யுள் ஓதி பெரியாரைக் குஞ்சித பாதத்தில் அன்போடு சேர்த்த காட்சி அங்கு நின்ற அன்பர்களைப் பரவசப்படுத்தியது.

இத்தருணத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மானேஜரும் முடிக்குரிய நியாயவாதியுமாகிய திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் வந்து பின் உச்சிக் காலத்திற் தெரிசனஞ் செய்து விழாவிற் பங்குபற்றியது குறிப்பிடத் தக்கதாகும்.

நாவலர்மண்டபத்தில்

நாவலர் மண்டபத்தில் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் தலைமையில் சைவப் பெரியார் திரு. சிவபாதசுந்தரம் அவர்களின் நினைவுநாட் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அன்னாருடைய வாழ்க்கை, சேவைச் சிறப்புக்களைபற்றி பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர், வித்துவான் க. கி. நடராசன், பிரம்மஸ்ரீ வை. ஆத்மநாதசர்மா ஆகியோர் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர்.

நானிலம் வளம்பெற நன்மக்கள் உய்ய நல்லூர் நாயகன் திருக்கோயில் 'கொடி' ஏறியது



எவ்வெவர் தம்மை யேனும் யாவரோ யெனினும் போற்றின் அவ்வவ ரிடமாக் கொண்டே யவர்க்கருள் புரிவாய் போற்றி மெய்வரு தெளிவி லுள்ளோர் வெளிப்பட வுணர்ந்து நேர்க்குந் தெய்வத சோகமூர்த்தி சிறப்பொடு தருவாய் போற்றி!

இடதுசாரிகளின் இதயம் வெளியாகின்றது

சிங்கள மொழியிற் செயலாற்ற வேண்டுமாம்

புலி பசுத்தோல் போர்த்துகின்ற பொழிப்பை அது தானாகவே வெளிப்படுத்திவிட்டது. கழுத்துறை நகரசபைத் தலைவர் இடதுசாரி. பாராளுமன்றத்திற் ஏராளமாகப் பொதுவுடைமைக் கூத்தாடிப் பாட்டுப் படிக்கும் பேர்வழி. சும்மா இருந்து பொதுமக்கள் வைத்த தப்பபிப்பிராயத்தைப் பேணக்கூடாதா?

நகரசபைத் தலைவர் பதவி வெறியிலே மயங்கி அச்சபை அலுவல்களைச் சிங்களத்திலேயே செய்ய வேண்டுமெனத் தீர்மானம் செய்து வைக்கத் தீவிரமாய் முயன்று வெற்றி பெற்றது மல்லாமல் தமிழ் மொழிக்காகப் பரிந்து பேசிய இஸ்லாமிய அங்கத்தவர்களைக் குழப்படிகாரரெனவும் கூறிவிட்டார்.

அது அங்கே: கொழும்பில் நடந்ததென்ன? திரு. சி. உருத்திராவுக்கெதிராகப் பொதுவுடைமையினர் போட்டியிட்டுச் சிங்களம் தமிழ் வகுப்பு வாதத்தைப் புகுத்தி அப்பெரியாரைப் பலாத்காரமும் செய்துவிட்டார்கள்.

அப்பால் சிங்கப்பூரிலே திரு. மணிக்கம் சரவணமுத்துவின் உயிரை வாங்கிவிடப் பயமுறுத்தல் செய்கின்றனராம் அப்பகுதிப் பொதுவுடைமையினர். திரு. சரவணமுத்து உண்மைத் தமிழனல்லவா — பயமுறுத்தலைப் பயப்படாது எற்றுக்கொண்டார், இடதுசாரிகளின் தொடர்பைத் தொடர்ந்து நாடும் இலங்கை அரசியற் கட்சிகள் இனியாகிலும் இவர்கள் தமிழர்கள் இஸ்லாமியர்களுக்கு எவ்வாறு முதலைக் கண்ணீர் விடுகிறார்கள் என்பதை யறியார்களா?

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோவில் அத்திவாரக் கல்நாட்டுவிழா

புராதனப் பெருமைவாய்த்ததும் ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டதுமாகிய முருகனாலயத்துக்கு கல்நாட்டச்சந்தர்ப்பம் கிடைத்தமை தம்பூர்வபுண்ணியம் என்றும் தமிழும் சைவமும் வளர முருகனை வழிபாடு மிக அவசியம் என்றும் உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமிகோவில் அத்திவாரக்கல் நாட்டுபொழுது திரு. தியாகலிங்கம் ஜியூ வி. அவர்கள் கூறினார்கள்.

உரும்பராய் வாசர் திரு. செ. சிவஞானம் D.R.O. அவர்கள் தலைமையில் பகிரங்க கூட்டம் நடைபெற்றது. திரு. T. முருகேசம்பிள்ளை D.R.O, திரு. எஸ். சுப்பிரமணியம் D. R. O, பலாலி ஆசிரிய கலாசாலைப் பேராசிரியர் பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை, திரு. செ. தியாகலிங்கம ஜியூ வி. ஆகியோர்கள் ஆலயங்களின் அவசியம் பற்றியும் முருகன் வழிபாட்டின் பெருமையைப்பற்றியும் பேசினார்கள்.

பல ஆயிரரூபா நன்கொடையளித்த திரு. தியாகலிங்கம் ஜியூ வி. அவர்களுக்கும் அவரது பாரியாருக்கும் பேச்சாளர்களுக்கும் ஆலய தரும பரிபாலன சபைக் காரியதரிசி திரு. செ. தனபாலசிங்கம் அவர்கள் நன்றி கூறினார்கள்.

—0—

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம்

மேற்படி சங்கத்தார் 5-8-54ல் நடத்தவிருந்த அறுபத்தக்கிருத்தவரப் போட்டி 5-9-54க்குப்பின் போடப்பட்டிருப்பதாக அறியத் தருகின்றனர்.

சென்னை முதலமைச்சருக்கு வெற்றி

சென்னை முதலமைச்சர் ஸ்ரீ காமராசநாடார் அவர்களுக்கும் ஸ்ரீ கோதண்டராமனுக்குமிடையே நடந்த போட்டியில ஸ்ரீ காமராசநாடாருக்கு 16,100 வாக்குகள் மற்றவர் பெற்றதிலும் கூடக் கிடைத்தன. வாக்குகளின் தொகை முறையே 34,500ம் 16,400ம் ஆகும்.

திருச்சிற்றம்பலம்.
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

யாழ். ஜய ஹூ ஆடி மூ
உஉ ௳ வெள்ளிக்கிழமை

மரவரிக்கு மாற்று மருந்தா...?

ஊருக்கொரு கள்ளுக்கடை உண்டாக்கவும் மரவரிச் சட்டத்தை ஒழித்துவிடவும் உபாயங் கூறியிருக்கின்றார்களாம் அந்த விசாரணைக் குழுவினர். கள் அருந்தவே வேண்டும் அதற்கும் சமரச ஒழுங்கு உண்டாக்கவே வேண்டும் என்ற முடிபை விசாரணை வித்தகர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதே இச்செய்தியின் பொழிப்பாகின்றது.

காஞ்சிரையைக் களைந்து ஆங்கு பூமத்தையை நட்டாற்போன்றது விசாரணையாளரின் வேதாந்தம் இந்நாட்டு மக்களின் மதுவிதி மாறி மாறி வேறு விதத்தில் நின்று என்றும் மயக்கம் கொடுக்கும் வகையில் இருக்கின்றதே........!

ஊருக்கொரு கள்ளுக்கடைக்கும் பனந்தோட்டத்துக்கொருபானக்கொட்டிலுக்கும் எத்தனை வித்தியாசமிருக்கின்றதோ நாமறியோம். சமய சமூக தேவைப்படி கோயில் குளம் கல்விக்கழகம் முதலியன நிறுவப்படுதல் போன்று கள்ளுக்கடைகளும் அமைக்கப்பட வேண்டுவது இக்காலச் சான்று போலும்!

மரவரிச் சட்டத்தினால் யாழ்ப்பாணநாட்டு மக்கள் மானமிழந்து மதியிழந்து போனதிசை யெல்லார்க்கும் பொல்லாங்கை விளைவிக்கும் நிலையில் வந்திருப்பதைச் சான்று பகன்றார் வாய்க் கேட்டறிந்த விசாரணையாளர் இப் பெருந்தீங்கை எவ்வாறு நீக்கலாமென்று ஆழமாக ஆராய்ந்திருப்பரேல் அயல் நாட்டிற் சென்னையிலே மதுவிலக்கை அரசாங்கம் கொணர்ந்து பொதுசனத்திற்கு மகத்தான சேவை செய்திருப்பதை முன்மாதிரியாகக் கொண்டு ஒரு வழி வகுத்திருப்பார்களன்றோ? கள்ளுண்ணல் ஆகாத செயல் என்ற உண்மையை இவர்கள் கைக்கொண்டிருந்தால் அப்பால் இப்பானத்தைப் பனையிலிருந்தோ தென்னையிலிருந்தோ இறக்கும் தொழிலாளரின் பொருளாதார நிலையை ஆராய்ந்து அவர்களுக்கு இத்தொழிலைப் போன்ற இன்னொருதொழிலைக்காட்டி நாட்டின் நலனைப் பாதுகாத்திருப்பார்களல்லவா?

இளையபாளை தட்டி முட்டி
 கட்டிச் சுண்ணம்
ஏற்றி யெடுக்கின்ற
 வின்ப நன்னீர்
தழையும் பனங்கட்டி
 சீனிகற் கண்டுகள்
சமைக்க வுதவுமே
 ஞானப் பெண்ணே

என்று நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் நவின்றதுபோல கள்ளிறக்குவோரையே பதனீர் பெற வமைத்துப் பனங்கட்டி, சீனி, கற்கண்டு முதலிய தித்திப்புப் பொருட்களை உண்டுபண்ண உதவி பெற்றுத் தொழிலாளர்களுக்குப் பழிசெய்யாமலும் நாட்டிற்கு நல்ல முறையில் பொருளாதார வளம் ஈட்டியும் பெரும்பயனளிக்கக்கூடிய ஒரு ஆக்க வழியை ஆராய்ந்து காட்டியிருக்கலாம் அந்த விசாரணையாளர். அவ்வாறின்றி ஊர்கடோறும் கள்ளுக்கடைகளை அமைத்து மரவரித் திட்டத்தை ஒழிக்க இவர்கள் புகட்டிய புத்திமதியை யென் சொல்வேம் ....!

அம்மட்டில் இருந்தாலும் போதாதென்று ஐந்தாண்டுகளுக்கு மக்கள் கள்ளுக்கடை அமைப்பை மாற்றும் ஆற்றல் அற்றவர்களாயிருக்கவும் விசாரணைச் சபையாளர்கள் யோசனை கூறியிருக்கின்றார்கள். பொது மக்கள் இருதலைக்கொள்ளி யெறும்புபோலல்லவா அமர வேண்டிய அபாயநிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்!

இந்தவகையிலே இயற்றப்படவேண்டியதென்ன? சமூக சமய சேவா சங்கங்கள் ஒருங்கு சேர்ந்து ஒரே குரலில் பூரண மதுவிலக்கை அரசாங்கம் சட்டப்படி கொணர்ந்திடவேண்டும் என்று மாபெரும் கூட்டங்கள் வாயிலாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் பாராளுமன்ற அங்கத்தவர்களின் உதவிகொண்டும் கேட்கவேண்டும். பல கோடி பொன்னை நிலை தெரியாது விரயஞ்செய்யும் அரசாங்கம் ஒரு கோடி பொன் செலவுசெய்து கருப்பநீர் கற்கண்டு சீனிமுதலியன செய்யும் ஆலைகளை அமைத்துக் கள்ளிறக்குவோருக்கு வேலையையும் மக்களுக்குமன அமைதியையும் நாட்டிற்கு நல்ல வளப்பத்தையும் தேடவேண்டும் என்று நாம் எண்ணுகிறோம். அமைச்சவை இதை ஆராய்ந்து ஆவன செய்யுமா? அன்றி மக்கள் வாழ்வுக்கு மாபாதகம் புரிய உதவியாயிருக்கப்போகின்றதா? மானமெல்லாம் போனபின்னர் வாழ்வதும் ஓர்வாழ்வா....!

திருமுருகாற்றுப்படைச் சிறப்பு

பிறவிப்பெருநெறியில் வரும் பேருதவி

'ஆற்றுப்படை' என்பது பழந்தமிழிலக்கிய அமைதியொன்றாகும். தொல்காப்பியர் இதனைப் பாடாண்டிணைக்குரிய துறைகளில் ஒன்றாகத் தருகிறார்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்பது அவர்தரும் ஆற்றுப்படை இலக்கணமாகும். பரிசில் பெற்றானொருவன் எதிர்ந்த வொருவனைத் தனக்குப் பரிசில் வழங்கியவனிடம் வழிப்படுத்துவதாக அமைவது ஆற்றுப்படை எனலாம். எனவே ஆற்றுப்படை இலக்கியத்தில் மூன்று பாத்திரங்கள்* வருகின்றனர். ஆற்றுப் படுத்துகின்றவன், ஆற்றுப்படுத்தப் படுகின்றவன் பாட்டுடைத் தலைவன் என்று. ஆற்றுப்படுத்தப் படுகின்றவன் அவ்வளவு முக்கியமான பாத்திரமல்லன்; ஆற்றுப்படுத்துகின்றவன் தன் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்கு ஆற்றுப்படுத்துகின்றவன் ஒரு வாயிலாக — ஒரு கருவியாக மாத்திரம் அமைகின்றான். ஆற்றுப்படுத்தப்படுகின்றவனுடைய கருத்துக்களோ உணர்ச்சிகளோ ஆற்றுப்படைக்கவிதையில் அவ்வளவு முக்கியமானவையல்ல. ஆற்றுப்படுத்துபவனுடைய அனுபவச் செழுமையே ஆற்றுப்படையில் மிகுதியும் புலப்படுவது. அதவும் அவனுக்குப் பரிசிலீந்த வள்ளலைப்பற்றி யெழுந்ததாகவேயிருக்கும்.

திரு. சி. முருகவேள்
ஏழாலை

திருமுருகாற்றுப்படை பத்துப் பாட்டில் கடவுள் வாழ்த்துப்போல முதலாவது பாட்டாக அமைந்துள்ளது. இது மற்றைய சங்க நூல்களிலும் காலத்தாற் பிந்தியது என இக்கால ஆராய்ச்சியாளர் கூறுவர். இந் நூலுக்கும் மற்றைய ஆற்றுப்படை நூல்களுக்கும் சில வேற்றுமைகள் உண்டு. மற்றைய ஆற்றுப்படை நூல்கள் ஆற்றுப்படுத்தப்படுபவர்களைக் கொண்டே தம் பெயர்களைப் பெற்றுள்ளன. இது பாட்டுடைத் தலைவனைக்கொண்டே தன் பெயரைப் பெற்றுள்ளது. ஆற்றுப் படுத்துகின்றவன் ஆற்றுப்படுத்தப் படுபவன் ஆகிய இருவரின் செய்திகள் மற்றைய ஆற்றுப்படைகளில் காணப்படுமளவுக்கு இதில் காணப்படவில்லை. திருமுருகாற்றுப்படையில் வரும் ஆற்றுப்படுத்துகின்றவன் ஆற்றுப்படுத்தப்படுபவன் ஆகிய இருவரையும் கூத்தரென்றோ பாணரென்றோ விறலியரென்றோ கூற முடியாது! பிறவி என்ற நெடும் பாதையில் எதிர்ப்பட்ட இரண்டு உயிர்கள் என்றுதான் அவர்களைக் கூறவேண்டும். இவ்வேற்றுமைகளினால் திருமுருகாற்றுப்படை தொல்காப்பியர் தரும் ஆற்றுப்படை இலக்கணத்துக்கு அமைகிறதில்லை நச்சினார்க்கினியர் வலிந்து அமைத்துக் கொள்கிறார்.

---

* இச்சொல் நாடகவியலுக்கே பொருத்தமானது வேறு சொல் இன்மையின் இவ்விடத்தில் வழங்கியுள்ளேன்.

[வளரும்.]

நேயர்கள் நெஞ்சம்

யாழ்ப்பாண நகரசபை கவனிக்குமா.....?

சுதந்திரமடைந்து அநேக வருடங்கள் கழிந்தமையால் தேசிய பாஷைகள் தயக்கமின்றி அரசாங்க பாஷைகளாகவேண்டும் காலங் கடத்துவதினால் இன்றைய அரசாட்சிப் பீடத்திலிருப்போர்க்கு மனப்பற்று இல்லாமையே காரணமாகும் என்று கூற வேண்டி நேரிடும். ஏனெனில் இன்றைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் அனைவரும் ஆங்கிலங்கற்ற படியாலும் அவர் சந்ததியினர் ஆங்கிலப் பட்டதாரிகளாயிருப்ப[illegible]மென்க. பாராளும[illegible] அங்கத்தவர்கள் எ[illegible]லாரையும் சுய பாஷை[illegible] கற்றவர்களாக அனுப்பினால் அரசாங்க ஆட்சி எம் மொழிகளில் நடக்கும் என்பதனைச் சிந்தித்துப்பாருங்கள்.

இவை இங்ஙனமிருக்க நம் யாழ்ப்பாணம் முன் அரசகேசரி, சங்கிலியன் முதலிய தமிழ் அரசர்களால் சிறப்புடன் அரசாளப்படவில்லையா? தமிழ் மொழியின் ஆட்சிஸ்தானமாகிய யாழ்ப்பாண நகரசபை நடவடிக்கைகள் தமிழில் நடவாமலிருப்பதற்குக் காரணம் என்ன....? கிராமச் சங்கங்கள், நகரசபைகள் அவ்வப்பகுதி மக்களின் நலன்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டன. சிலர் ஆங்கிலத்தை விட்டால் முன்னேற முடியாதென்று சாக்குச் சொல்கிறார்கள். சீன, யப்பான் முதலிய நாடுகளில் யப்பான் தேசம் தன் தேசியபாஷையையே உபயோகிக்கிறது. அது விஞ்ஞானத்தில் அல்லது கைத்தொழிலில் முன்னேறவில்லையா? மற்றைய எல்லா நாடுகளையும் விட மேலாக முன்னேறி யிருக்கிறது. சென்ற மகாயுத்தத்தில் உலகத்தையே நடுங்கச் செய்தது எல்லோருக்கும் தெரியும்.

ஒருவன் தன் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தவே பாஷையை உபயோகிக்கிறான். ஆகவே உள்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

பட்டினத்தடிகள் குருபூசை

சைவபரிபாலன சபை ஆதரவிற் பட்டினத்தடிகள் குருபூசையன்று பண்டிதர் திரு. ம. வே. திருஞான சம்பந்தப்பிள்ளை ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்:—

"பட்டினத்தடிகள் பாடல்கள் இலகுவான நடையில் அமைந்திருக்கின்றன. பாடல்களிலேயுள்ள சொற்கள் வசன ரூபமாகவும் எவர்களும் விளங்கக்கூடிய முறையில் மாறிவிடத் தகுந்தன,

'குருவருளும் வெண்ணீ
 றொழுக்கஞ்சிவ நேசவி
லாறுருவ மென்றிலமே
 லக்குந் திருவடியுஞ்
சிட்டான வர்ச்சசிலையுந்
 தொண்டிரு சைவலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு'

என்ற வெண்பா அகத்தியர் சிவாலய முனிவருக்குத் திரட்டிக் கொடுத்த தேவாரங்கள் முதலிய பொருள்களை விளக்குகின்றன இவ்வெட்டும் பட்டினத்தடிகள் பாடல்களிலும் அமைந்திருக்கின்றன" எனக்கூறி அந்தஎட்டுவிஷயங்கட்கும் தனித்தனி ஒவ்வொரு திருப்பாடலை எடுத்துக்காட்டினர்.

பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் அவர்கள் பட்டினத்தடிகள்வாழ்க்கை வரலாற்றை விரிவாய் எடுத்துரைத்தனர்.

முன்வந்ததற்றொடர்ச்சி — [4]

செந்தமிழ்ச் சிவத்திரு நான்மறைகள்

'இருக்கு' 'சாமம்' 'வேதங்கள்' ஆராய்ச்சி

'சாமவேதம்' எனுஞ்சொல், இன்னிசை — பண் எனும் பொருளில் வருதல்

மேல்நிகழ்த்திய ஆராய்ச்சியால், 'இருக்கு' 'யசுர்' 'சாமம்' அதர்வணம்' என்னும் வடமொழிவேதங்கள் நான்கில் மூவர் தமிழிலுதவிய அருள் நூல்களில் இருக்கு, சாமம் எனும் இரு சொற்களே எடுத்தாளப் பட்டிருப்பதால் அவ்விரு சொற்களுக்கும் ஆரியவேதங்கள் என்ற கருத்தை விட வேறு பொதுப் பொருள் உண்டென்றும் அவற்றுள் இருக்கு என்னுஞ் சொல், பாட்டு மந்திரம் அறிவுநூல்கள் என்னும் பொருள்படுமென்றும், சாமம் என்னுஞ் சொல், இன்னிசை, இசைநூற்களைக் குறிக்குமென்றும். அவ்விசைகளுள் மூவர்தேவாரங்களில் தமிழிசை முறைகளே கூறப்பட்டனவென்றும் தக்கசான்று காட்டி நிறுவப்பட்டது. இதனால் .... மறுப்புரையாளர், மூவர் தேவாரம் முதலிய செந்தமிழ்த் தெய்[illegible] நூல்களில் ஆங்காங்கே [illegible]யிலும் இருக்கு, சாமம் [illegible]னுஞ் சொற்களால், [illegible]பொழுது வடமொழியிலுள்ள இருக்கு சாமமென்னும் வேதங்களே சுட்டப்பட்டதெனக் காட்டிய முடிபு பொருந்தாமை தெளிக.

தமிழ் மறைகள்
உண்டென்பதற்குத்
தக்கசான்றுகள்

திருஞான சம்பந்தப்பெருமான் அருளிய 'மறைகொண் மிழலையீர்' என்னும் சொற்றொடரால் இறைவன் ஏற்றுக்கொள்ளும் அடியார் சொன்மாலைகளையே 'மறை'யென்று குறிப்பிடுகின்றார். ஆரிய வேதத்துள் திருவீழிமிழலையில் விளங்கும் இறைவனை ஏத்தும் பாடலொன்றுங் காணப்படாமையால், மேற்காட்டிய 'மறைகொண் மிழலையீர்' எனும் சொற்றொடர் திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய தமிழ்மறைகளையும், திருநாவுக்கரசர் முதலிய அடியார்களியற்றிய தமிழ் மறைகளையுமே குறிக்கின்றது. இதனை,

"உன்னிய வருமறை யொலியினை
முறைமிகு பாடல்செய்
இன்னிசை யவருறை யெழில்திகழ்
பொழில் வீழிமிழலை"

எனத் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருப்பாட்டுப் பகுதி மீண்டும், நிலைநாட்டுகின்றது. இப்பாட்டுப் பகுதியில் இன்னிசைப் பனுவலியற்றும் அடியார்கள் உறைகின்ற வீழிமிழலையென்று குறிப்பிடப்படுகின்றது. நாம் அருளிய தேவாரப் பதிகங்களைத் தமிழ் மறைகள் என்னுங் கருத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் பல இடங்களில் அருளியிருக்கின்றார். இதனை 'ஞாலம் புகழ்காழி ஞானசம்பந்தன் — ஒலு மறையோது நாவூர் மயானத்தை' 'ஞான முனிவனிடு மறை' 'ஞானசம்பந்தன் சொன்ன கலைகளிவை ....

எனத் திருஞானசம்பந்தரும்,

"அருமறை யோடு ஆறங்கம்
ஆய்ந்து கொண்டு
பாடினர் நால்வேதம்"
"அங்கமாய் ஆதியாய்
வேதமாகி
அருமறையோ டைம்பூதந்
தானே யாகி"
"மறையுடைய வேதம்
விரித்தாய் போற்றி"

எனத் திருநாவுக்கரசரும், "நாவோட்டு மந்திரம் நான் மறை வேதம்" எனத் திருமூலரும் அருளிய திருப்பாட்டுப் பகுதிகள் மெய்ப்பிக்கின்றன. இதில், மறை ....

வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

க. வேந்தனார் அவர்கள்

... .

கல்லார் கவலை களைவாரே' என்னும் அவர் அருள மொழிகளால் உணர்க. நம்பியாண்டார் நம்பி ஞானசம்பந்தனிஞ் சுருதிக் கழைவளர் குன்று எனக் குறிப்பிட்டசெய்யுட் பகுதியும் இக் கருத்தை அரண் செய்கின்றது.

இனித் திருஞானசம்பந்தர் தம்மையே குறித்துப் பல வேறிடங்களிற் பயன்படுத்தும 'மறைஞான சம்பந்தன்' எனனுஞ் சொற்றொடர் அவ்வாறே பல முறைபயன்படுத்தும தமிழ் ஞானசம்பந்தன் என்னுஞ் சொற்றொடரை ஒப்ப இருத்தலின், இவர் தமிழை ஓதாதுணர்ந்தமை போலவே அறம் பொருள் இன்பம் வீடு எனும் நாற்பொருள் பயக்கும் தமிழ்மறைப்பொருளை யுணர்ந்தமையும், பெறப்படும். மறை, அறம் பொருள், இன்பம், வீடு என்னும நாற்பொருள்களையும அடக்கி நிற்குமென்னும உண்மையை,

முன்னம் படைத்தனன்
நான்மறைகள் அம்மறைதான்
மன்னு மறம் பொரு(ள்) இன்பம்
வீடென் றலகில்
நன்னெறி மேம்பட்டன
நான்கன்றே
"அழிந்த சிந்தை அந்தணாளர்க்
கறம் பொருளின்பம் வீடு
மொழிந்த வாயான"
'ஆலதன் கீழிருந்து நால்வர்க்
கறம் பொருள் வீடின்
பம் ஆறங்க வேதந் தெரித்தானை"

என்னும் அருள்மொழிகள் அறிவுறுத்தும. மேற்காட்டியவாறு மறையெனும் நூல் அறம் பொருள் இன்பம் வீடு எனும் நாற்பொருள்களை விளக்கும் தமிழ் மறையினையே குறிக்குமென்பதையும் அத் தமிழ் மறையே வேதத்துக்கு மூலம் என்பதையும்

"பல வேத மங்க மாறும்
மறை நான் கவையுமானார்"
"மறைகள் வேதம்
விரித் தோதுவார்"

வேதம் என்னுமிரு சொற்களையும் அடுத்தடுத்து அருளிச் செய்திருப்பதை நோக்க, மறை வேறு, வேதம் வேறு என்பது விளங்கும். மேற் காட்டிய எடுத்துக் காட்டுக்களில் திருநாவுக்கரசர் அருளியதாக வரும் முதலாவது மூன்றாவது அருண்மொழிகளால் வேதமியற்றுதற்கு மறையே ஆய்ந்துகொள்ள வேண்டிய பொருளென்பது புலனாகும்.

"நான்மறை வல்ல ஞான சம்பந்தன" என்பதற்கும், 'நல்ல செந்தமிழ் வல்லவன் ஞான சம்பந்தன்" என்பதற்கும் சுந்தரரால் கூறப்பெறும். 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன' எனபதற்கும் வேறுபாடு காணப்படவில்லை. ஈண்டு 'வல்லன்' என்னுஞ் சொல் 'மாணப்பாடி மறைவல்லானையே - பேணப் பறையும்' என்ற அருள் மொழியில் பொருள்படல்போல இயற்ற வல்ல என்றே பொருள்படும். நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தனே நான் மறை இயற்ற வல்லவனெனில், அம்மறை திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தமிழ் மறையன்றி வேறென்றாகாது! இச்சொற்றொடரில் தமிழும் மறையுஞ் சொல்லும் பொருளுமாதல் காண்க. இதனையே "முத்தமிழ் வல்ல ஞான சம்பந்தன்" என்று கூட்டிக் கூறுதலையும் உணர்க.

* * * [வளரும்]

நயினாதீவு
கணேசவித்தியாசாலை

மேற்படி வித்தியாசாலையில் வருட விளையாட்டுப் போட்டி பெற்றோர் ஆசிரிய சங்க ஒத்துழைப்புடன் 27-7-54 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நல்லூர், கந்தசுவாமிகோயில்

மகோற்சவம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஆடிமீ 20 உ புதன்கிழமை (4—8—54) கொடியேறித் திருவிழாத் தொடங்குகின்றது.

விசேட திருவிழாக் குறிப்பு

ஆடிமீ ௨௯ (13-8-54) வெள்ளிக்கிழமை மஞ்சம் ஆவணிமீ ௫ (21-8-54) சனிக்கிழமை கார்த்திகைத் திருவிழா, ௭ (23.8-54) திங்கள் கைலாசவாகனம், ௯ (25-8-54) புதன்கிழமை தெண்டாயுதபாணி, ௧௧, (27-8-54) வெள்ளிக்கிழமை தேர், ௧௨ (28-8-54) சனிக்கிழமை தீர்த்தம், ௧௩. (29-8-54) ஞாயிறு பூங்காவனம்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணி

திருக்கேதீஸ்வரத் திருப்பணிகு ஆதரவு அளிப்பதற்கு வவுனியா சைவ மக்கள் பெரிதும் விரும்புகின்றமையால் சமீபத்தில் வழக்கறிஞர் திருவாளர் த. அய்யாத்துரை அவர்களும் திருக்கேதீஸ்வரத்திருப்பணிச்சபைக் காரியதரிசி திரு. சு. சிவசுப்பிரமணியமும் அப்பகுதி அடியார்களைக்கண்டு பல அங்கத்தவர்களைச் சபைக்குச்சேர்த்தனர். திருப்பணிச்சபைக் காரியதரிசி சு. சிவசுப்பிரமணியம் வவுனியாவுக்குச் சமீபமாகவுள்ள சாஸ்திரி கூழாங்குளத்திற்குச் சென்று அவ்விடத்து அடியார்களுடன் அங்குள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற் திருக்கேதீஸ்வரத் திருப்பணியும் அவ்வாலயத்தில் நடைபெற இருக்கும் புனருத்தாரணத் திருப்பணியும் நன்குநடைபெற நிகழ்ந்த பிரார்த்தனையில் கலந்துகொண்டார்.

ஸ்ரீ முன்னேஸ்வர மகோற்சவம்

நிகழும் ஆடிமீ 32 உ (16-8-54) திங்கட்கிழமை கொடியேறி வழக்கம்போல் மேற்படி கோயில் உற்சவங்கள் நடைபெறும்.

பின்வரும் குறிப்புகள் உற்சவ விசேடங்களை அறியத்தரும்.

ஆவணி 22 (7-9-54) சிவனடியார் திருவிழா 23 (9-8-54) பிக்ஷாடனர் திருவிழா, 24 (9-9-54) நடேசர் திருவிழா, 25 (10-9-54) வேட்டைத்திருவிழா, 26 (11-9-54) தேர்த்திருவிழா, 27 (12-9.54) தீர்த்தத்திருவிழா.

திருக்கேதீச்சர யாத்திரை

கொழும்பு இந்துக் கல்லூரிச் சைவ மாணவர் சங்கத்தின் ஆதரவில் கொழும்பு இந்துக்கல்லூரி மாணவருட் சிலரும் ஆசிரியருட் சிலரும் சென்ற வியாழக்கிழமை (15-7-54) யன்று பிற்பகல் மன்னார்ப் புகையிரத மார்க்கமாகத் திருக்கேதீச்சரத்துக்கு யாத்திரை செய்தனர்.

அவர்கள் அத்தலத்தின் கண்ணே தங்கித் தினப் பூசையிலும் தேவார பாராயணத்திலும் பாலாவித் தீர்த்த மாடுதலிலும் மற்றும் பல திருத்தொண்டுகளிலும் பங்கெடுத்து இறைவன் அருள்வயத்தராய் சென்ற சனிக்கிழமையன்று கொழும்புக்கு மீண்டனர்.

இத்தகையதிருத்தொண்டுகளில் குழந்தைகள் பங்கெடுத்தப்பழகுதல் சைவத்தின் வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டுகளுள் தலைசிறந்தது என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

கண்காட்சிக் கல்வி முறை

கலவன் பாடசாலைகளுக்குக் கட்டுப்பாடு

அரசாங்க கலவன் பாடசாலைகளிற் படிக்கும் ஆண் பெண் பிள்ளைகள் காட்சி மூலம் கல்வி கற்கும் முறையில் கலந்து பிரயாணஞ் செய்யக்கூடாதென்று கட்டுப்பாடு விதித்திருக்கிறார் வித்தியாதிகாரி.

இத்தகைய பிரயாணங்களுக்கு ஆண்பிள்ளைகள் புறம்பாய்ப் பெண்பிள்ளைகள் புறம்பாய்ப் போக வேண்டுமென்றும் ஆண் பிள்ளைகளுடன் ஆசிரியர்களும் பெண்பிள்ளைகளுடன் ஆசிரியைகளுமே போகலாமென்றும் ஆண் பிள்ளைகளானால் ஆண்களும் பெண் பிள்ளைகளானால் பெண்களுமாய் நாலு பெற்றோர் ஒவ்வோர் மாணவ தொகுதியுடன் போகவேண்டுமென்றும் விதிக்கப்பெற்றிருக்கின்றது.

இயன்றளவுக்கு இராக்காலத்தில் வெளியில் தங்குதல் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் ஒரு பிள்ளை ஒருவருடத்தில் ஒருமுறையே இத்தகைய பிரயாணத்துக்குப் போகலாம் என்றும் அவ்விதி மேலுங் கூறுகின்றது.

மகாவலிகங்கையில் ஏற்பட்ட மரணமும் வேறு பிழையான ஒழுக்க முறைகளும் இக்கட்டுப்பாடடுக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

போக்குவரத்து அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில்

—0—

வருட மகோற்சவம் 1954

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெருவீதிகள் 1954ம் ஆண்டு ஆவணி மாதம் 4-ந் திகதி தொடக்கம் ஆவணி மாதம் 29-ந் திகதிவரையும் எவ்வகையான வண்டிகளும் கீழ்க்காட்டப்படும் தெரு வீதிகளால் போக்குவரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித் துறைப் பெருந்தெருவில் அரசடிச் சந்திக்கும் 2ம் மைல் கல்லுக்கு மிடையேயுள்ள பாகம்.

(ஆ) பண்டாரக்குளத்து ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக் கும் இடையேயுள்ள கோவிலின் வீதி.

2. சமயோசிதமாக மாறறப் படும் தெருக்களின் விபரம்:

குறித்த காலத்திலே வண்டிகள் இரதங்களைச் செலுத்துவோர் கீழே காட்டப்படும் தெருக்கள் மூலம் செலுத்துவார்களாக.

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் மார்க்கம (அல்லது எதிர்ப்புறம்) போக்குவரவு செய்வோர் காவலர் தெருவாலும் நல்லூர்க் குறுக்குத் தெருவாலும் செலுத்துக.

(ஆ) அரசடித் தெருமூலம கோப்பாய் மார்க்கம் (அல்லது எதிர்ப்புறம் செல்லுவோர் "உவைமன" தெரு காவலர் தெரு நல்லூர்க் குறுக்குத் தெரு மார்க்கமாகச் செலுத்திச் செல்லுக.

3 திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் இரதங்கள் மூலமாகச் செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ் வண்டிகளையும் இரதங்களையும் கொண்டுபோய் நிரலே ஒதுக்கி விடுதற்கான தானங்கள் மூன்றிடத்தில அமைக்கப்படுகின்றன, அவற்றைச் சாரதிகள் பயன்படுத்துவார்களாக.

(அ) அரசடித்தெரு மூலமாக குறித்த கோவிலுக்குச் செல்லும் வண்டிகள் இரதங்கள் வீரமாகாளி அம்மன் கோயில் நிலத்தில் விடப் படலாம்.

(ஆ) தெற்கிலிருந்து கோயில் தெருவீதியால் வரும் வண்டிகள் இரதங்கள் கைலாய பிள்ளையார் கோவில் நிலத்தில் விடப்படலாம்

(இ) கோப்பாய் மார்க்கமாக வரும் வண்டிகள் இரதங்கள் முத்திரைச்சந்தை நிலத்தில் விடப் படலாம்.

(Sgd) C .P. WAMBEEK,
வடமாகாணப் பாதுகாவல மேற்பார்வையாளர்,
பாதுகாவலரிலாகா,(Police Office)
யாழ்ப்பாணம்
21 ஆடி 1954
M. 91 30—7; 6—8—54.

நீந்தற் போட்டி

ஸ்ரீ ஏர்ட்லிஸ் ரேமின்வால என்பார் ஸ்ரீ மு. நவரத்தினசாமியை ஓர் நீந்தற் போட்டிக்கு அழைத்தார் ஸ்ரீ நவரத்தினசாமி அவ்வழைப்பை ஒரு கட்டுப் பாட்டுடன் ஏற்றிருக்கின்றார். பாக்கு நீரிணையில் தாம் நீந்திய பகுதியை நீந்திய ஒருவருடனேயே தாம் போட்டிக்குப் போகலாம் என்பது அக்கட்டுப் பாடாகும்.

திருக்கேதீசுவரத்தில் ஆடி அமாவாசை

திருக்கேதீசுவரத்தில் ஆடி அமாவாசைத் தினத்திற்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் அடியார்கள் வந்திருந்தனர் விசேஷ பூசையும் அபிஷேகமும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் படத்தல் அன்னதானமும் நடைபெற்றன. பாலாவிக் குளத்தில் சுவாமி தீர்த்தமும் நடைபெற்றது. பூசைக்கும் அபிஷேகத்திற்கும் அன்னதானத்திற்கும புங்குடுதீவு அடியார்கள் பொறுப் பேற்று நடத்தினர். திருக்கேதீஸ்வர சைவப் பாடசாலை மாணவர்களால் தேவாரம் பாடப்பட்டது

மேற்சபை அங்கத்தவர் திரு. S. பரராசசிங்கம் J. P. அவர்கட்கு வரவேற்பு

மானிப்பாய் வாசிகள் 27—7—54 மானிப்பாய் மெமோறியல கலாசாலை மண்டபத்தில் வழக்கறிஞர் திரு. எஸ். இராசேந்திரன் தலைமையில்கூடி திரு. எஸ் பரராசசிங்கம் அவர்களை மேற்சபை அங்கத்தவராக அரசாங்கம் தெரிவுசெய்தமையைப் பாராட்டி அன்னாருக்கு ஓர் வரவேற்பு உபசாரம் ஆவணி மாதம் செய்வதெனத் தீர்மானித்தனர். வரவேற்புச் சபைத் தலைவராக திரு. எஸ். இராசேந்திரன் வழக்கறிஞரும் காரியதரிசியாக திரு. ரி. எஸ். சண்முகதாசனும், தனதிகாரிகளாக திருவாளர்கள் எம். செல்லையாவும், எஸ். சிவஞானமும் தெரிவு செய்யப்பட்டனர்.

அணிந்துரை அரங்கம்

ஐந்தாம் வகுப்பு

விவேகப்பரீக்ஷை அப்பியாசங்கள்

ஆத்தியோன் ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் யாழ்ப்பாணம் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையாரால் யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சகத்தில் அழகாக அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது.

பிரதியொன்றன் விலை: சதம் 45

ஆசிரியர் தமது முன்னுரையிற் கூறுகின்றவாறு விவேகப் பரீட்சையைப் பற்றி வேறுபாடான எண்ணங்களுளவே யெனினும் அது ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில ஒன்று விசேட இடம் பெறுகின்றது. ஆகையினாலே அத்துறையில உதவி புரிதலே நோக்கமாகக்கொண்டு எழுதப் பெற்ற இவ் வெளியீட்டை ஆசிரிய உலகு வரவேற்குமென்று நம்புகின்றோம்.

காரைநகர்ச் சைவ மகாசபை

நிகழும் ஆடி மாசம் 3உ (18—7—54) ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் சபையின் வாராந்தப் பிரசங்கத்தின்போது விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமான் எம. ஏ. கந்தையா அவர்கள் சைவசமயமும் மதுபானமும் என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு பேசும் பொழுது ஒவ்வொரு சைவசமயியும் சைவசமய சாஸ்திர உண்மைகளைக் கற்றுணர்ந்து அவைகளின் பிரகாரம் ஒழுகவேண்டும் என்றும், அவ்விதம ஒழுகி வருங்காலத்து மதுபானம் சைவமக்களின் வாழ்க்கையிலிருந்து தானாக விலகிக் கொள்ளுமென்றும், மதுபானததை நீக்குவதற்கு அதுவே சிறந்த வழி என்றும் ஒவ்வொரு சைவசமயிகளும் அந்நெறியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி வைத்தார்கள்.

மாத்தளை கந்தசாமி இந்துதமிழ்ப்பாடசாலை விளையாட்டுப் போட்டி

ஞாயிற்றுக்கிழமை 25-7-54பிற்பகல் மாத்தளை கந்தசாமி இந்து தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. மத்திய மாகாண உதவிவித்தியாதிகாரி ஸ்ரீமான் ஏ. சரவணமுத்து அவர்கள் விளையாட்டு மைதானத்தில் கொடியை ஏற்றி வைத்து இத்தகைய போட்டிகளின் இன்றியமையாமையை விளக்கினர். விளையாட்டில் திறமை காட்டியோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இல்லங்களில கம்பர் இல்லம் முதலாவதாகத்தெரிவு செய்யப்பட்டுப் பரிசுபெற்றது.

மரவரி நீக்கம்

மரவரி விசாரணைச் சபையார் மரவரி முறை நீக்குதலே நன்றென்று கூறித் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

ஒரு கிராமத் தலைமைக்காரரையுடைய ஒரு பகுதிக்கு ஒரு [redacted]டையாக வட இலங்கை 150 கள்ளுக் கடைகள் திறவலாமென்றும் ரணை வாக்கெடுப்பு றையை ஐந்து வருடங்களுக்கு நிறுத்த வேண்டுமென்றும் இக்கள்ளுக் கடைகள் கள் இறக்குவோர் ஐக்கிய சங்கங்களிடம் கள்ளு வாங்கவேண்டுமென்றும் அவ்வறிக்கை பிற் கூறியிருக்கின்றனர்.

சைவப் பிரசங்கம்

நிகழும் ஆடி மாதம் 9உ (24-7-54) சனிக்கிழமை இரவு 7 மணியளவில்காரைநகர் கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் இந்துக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஆலயத் தொழுவது சாலவும் நன்று என்னும் விடயத்தைப் பீடிகையாககொண்டு சிறந்த பிரசங்கஞ் செய்தார்கள். சமயகுரவர் நால்வரும் இன்னும் மற்றும் அடியார்களும ஆலய வழிபாடு செய்து இவ்வுலக இன்பங்களை நீத்துப் பேரின்ப வாழ்வை எய்தினார்களென்றும், அவர்களைப் பின்பற்றி நாங்களும் ஆலயவழிபாடு செய்து, பிறவிப் பெரும்பயனாகிய பேரின்ப வாழ்வைப் பெறவேண்டுமென்றும்வற்புறுத்திவைத்தார்கள்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161
விலாசம்:
67, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியசங்கம் [illegible]
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாச தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமயம் ஜாமீனி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் நூராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசகவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
பிரூப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

விற்பனைக்கு

வெளிச்சம் தண்ணீர்ச்சேவை வசதிகள் உள்ள
புதிய நவமான பங்களா
இலக்குமி வில்லா மானிப்பாய்

32 பரப்புப் பிரயோசனமுள்ள வளவில் உள்ளது விலைக்கிருக்கின்றது. கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதியறியுங்கள்.

S. RATNASABAPATHY,
Auctioner & Broker,
42, Colombogam Road.

Jaffna,
12-7-54.

கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில்குடி சினியர் தாமோதரம்பிள்ளை
இல 7733
— வழக்காளி
எதிராக

யாழ்ப்பாணம் செம்பாதெரு குடி கதிர்காமர் கனகசபை மகள் வாலாம்பிகை, காலஞ்சென்ற கனகசபை கைம்பெண் செல்லம்மாவின் ஆதனங்களுக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 820 ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரியாக

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7733-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1954 ௵ புரட்டாதி மாதம் 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சண்டிக்குளிக் கோவிற்பற்று சீதாரி இறை பாக்கியன் பண்டசைலே பா. கில. இ. ஏறக்குறைய 3 1/2 கிட்டங்கிக் கட்டிடமும் மெத்தைவீடும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் இதில் கிந்தமாக பிரிவிடப்பட்ட மேற்கரைவாசிப் பாகம் பா கில இலா ஏறக்குறைய 1¾ இந்தப் பரப்பு ஒன்றேமுக்காலுக்கும் எல்லை கிழக்கு மாதம் தயிலைன மாசாயரின் உரிமைக்காரருக்குரிய ஆதனம், வடக்கும் தெ[illegible]ம் ரோட்டு, மேற்கு ராஜா வைத்தி[illegible]ம் ராமநாதபிள்ளை பெண் ம[illegible]பாளுக்குடைய இதன்மீதி ஆதனம் இசடக்கலும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்
யாழ்ப்பாணம்
2-8 54
M 104 6-8

கந்தரோடைத் தமிழ் வித்தியாசாலை

ஸ்தாபகர் தின விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

• 30-7-54 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலைக் கீதாஞ்சலியுடன் கொடியேற்று வைபவத்தை விளக்கிய வலிகாமம் வடக்கு வித்தியா தரிசகர் திரு ஏ. அருளையா அவர்கள் இப்பாடசாலை ஸ்தாபகராகிய காலஞ்சென்ற உயர் திரு. கந்தையா உபாத்தியாயரவர்கள் சேவையைப் போற்றியதுடன் இப்பாடசாலை உயர்ந்தோங்கி, இப்போது உயர்தர பாடசாலையாக அரசாங்கம் அனுமதித்தமையைச் சுட்டிக்காட்டி, கல்வித் துறையிலும் உடலுள வளர்ச்சியிலும் சிறந்து விளங்குவது பற்றித் தன் உவகையையும் தெரிவித்து, இவ்வாண்டிலும் இப்பாடசாலைக்குக் காணிவாங்கி விஸ்தரிக்கப்படுவதால், வருங் காலத்து இஃதோர் மாதிரிப்பாடசாலையாக அமையும் என்பதையும் குறிப்பிட்டு விளையாட்டை ஆரம்பித்துவைத்தார்.

பாடசாலை மாணவர்கள் ஆண்பெண் இருபாலாரும் ஆனந்தமன்றம், சுப்பிரமணிய மன்றம், கந்தையா மன்றம் என்ற மூன்று இல்லங்களாக அமைந்து போட்டியாக விளையாடினர். போட்டியில் ஆனந்த மன்றம் 117 புள்ளிகளால் முதலிடம் பெற்று வெள்ளிக் கிண்ணப் பரிசு பெற்றது

ஸ்ரீமதி அருளையா அவர்கள் வெற்றிபெற்றோருக்கு தகுதிப்பத்திரங்களும், பரிசுகளும் வழங்கினர். பாடசாலைத் தலைமையாசிரியர் அவர்களால் பங்குபற்றிய யாவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரசபை கவனிக்குமா?

2-ம் பக்கத்தொடர்ச்சி

ளக் கருத்துக்களை வெளியிட ஆங்கிலத்தையே உபயோகிக்கவேண்டுமென்பது பேதமையாகும்.

சில நகரசபைகள், கிராமச் சங்கங்கள் சுயபாஷையில் நடைபெற்று வருவது போற்றற்குரியது. விசேடமாக யாழ்ப்பாண நகரசபை தமிழர்களின் தலைநகரமாயும், தமிழரசர்களின் அரசாட்சி ஸ்தானமாயுமிருந்தது. அங்ஙனமிருந்தும் யாழ்ப்பாண மாநகர சபை நிகழ்ச்சிகள் தமிழில் நடாத்தாமையிருப்பது வருந்தக்கூடிய ஒரு விடயமாகும். ஆயினும் ஒரு தமிழ் அங்கத்தவர் மேற்படிசபை நடவடிக்கைகளைத் தமிழில் நடாத்த வேண்டுமென்று ஒரு பிரேரணை கொண்டு வருவதாக அறியக்கிடக்கின்றது. இது போற்றற் குரியதாகும். இதனை மற்றைய எல்லா அங்கத்தவர்களும் ஆதரித்து மற்றைய இடங்களுக்கும் ஒரு முன் மாதிரி காட்டுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,
ஆசிரியர், சி. சீவரத்தினம்.
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்
20-7-54.

கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில்குடி ராமலிங்கம் ராமநாதன்
வழக்காளி
இல. 9767
எதிராக
கோண்டாவில் குடி
1 பத்திசயாதிலையானவர் சின்னப்பு செல்லையா
2 சின்னப்பு செல்லப்பா பெண் செல்லம்மா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 9767-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1954௵ புரட்டாதி மாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில் இறை பருத்தி ஒல்லை பா கில இலா 5 கல்வீடும் கிணறும் இந்த கில இலா ஐந்துக்கும் எல்லை கிழக்கு அருளம்பலம் பெண் நாகேஸ்வரிக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கையும் நாகம்மாள்கோவில் ஆதனமும் மேற்கு நாகம்மாள்கோயில் ஆதனமும் முத்தையாபெண் நாகரத்தினத்தின் ஆதனமும் தெற்கு கந்தையா பெண் வள்ளிப்பிள்ளைக்கும் பங்காளருக்குரிய ஆதனமும், இதில் குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் வடக்கெல்லை ஓரமாக 5 முழ அகலம் கொண்ட பாதை உரித்தும் பிற சேர்க்கலாக மீதியடக்கலும். இது காணிப்பதிவு கந்தோரில் D/84/79 ல் பதிவு செய்யப்பட்டது.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்
யாழ்ப்பாணம்
2-8-54
M 103 6.8

உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 8–8–54 ——15–8–54

மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

முதலிரு நாட்களும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும். குடும்பக் குழப்பங்களும் கந்தோரில் தொந்தரவுகளுமுண்டாகும். புதன் கிழமையின் பின் நிலைமை திருந்தும். ஆனால் மனச் சமாதானமிராது.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

முதலிரு நாட்களும் புதுமுயற்சிக்கு நல்லன. செவ்வாய் புதன் கவனமாய்க் கழிக்க வேண்டும் வாரமிகுதி நன்றாகும். ஆனால் தேகசுகவீனங்களுக்கிடமுண்டு.

மிதுனராசி மிருகசீரிடம், 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்தவாரம் உமக்கு நண்பர் அதிக உதவியாயிருப்பர். கூடிய வசதிகளையும் இன்பத்தையும் நீர் பெறுவீர். பண நிலைமையும் திருந்த வேண்டும். வியாழன் மாலை வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் தேகசுகம் விசேட கவனம் கொடுக்கவேண்டும். உத்தியோகத் துறையில் நல்ல காலம். அதிக பணம் சம்பாதிப்பீர். போட்டியிடுவோரை வெல்லுதற்கு இடமுண்டு.

சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு நல்லவாரம் ஆனால் மனச் சமாதானமிராது. வேலை அதிகமாயிருக்கும். நீர் புதுப் பொறுப்புகள் ஏற்கவேண்டி வரும். தேக சுகவீனங்களுக்குமிடமுண்டு.

கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் குடும்ப நிலைமைகளில் திருத்தங்களுக் கிடமுண்டு உம்முடைய பகைவரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். தாயாருடைய சுகவீனம தாக்கப்படக்கூடும் வாரஇறுதியில் தனலாபம் நிச்சயம்.

துலாமசித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

நல்ல வாரம். பழைய ஈடுகள் நல்ல பலனைத்தரும், சமூக முயற்சிகளில் அதிக நேரம் செலவழிப்பீர். புகழும் பெண்ணின நண்பர் உதவியும் நிச்சயம்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

இந்தவாரம் குடும்ப நிலைமைகள் திருந்தவேண்டும், நண்பர் அதிக உதவியாயிருப்பர் தன லாபமும் புகழும் நிச்சயம். ஆனால் மனச் சமாதானமிராது.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்தவாரம் குடும்ப நிலைமைகள் நல்லாயிருக்கமாட்டா. பிழை எண்ணங்களுக்கு இடங் கொடுப்பீர். தனலாபத்துக்கிடமுண்டு. ஆனால் செலவதிகரிக்கும்

மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

உம்முடைய முயற்சிகளில் சித்தி பெறவேண்டுமானால் நீர் மிக முயன்று உழைக்கவேண்டும். கந்தோரில் தொந்தரவுகளுக் கிடமுண்டு நீர் கவனமாயிராவிட்டால் பழிகளாளாக்கப்படக்கூடும். கண் நோய்களுக்கிடமுண்டு.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

குடும்ப நிலைமைகள் அதிகம் திருந்தும். தன லாபங்களும புகழும் நிச்சயம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். பகைவராலிடருமிடமுண்டு.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்ப நிலைமைகள் திருத்தமில்லாமலே யிருக்கும். தேக சுகவீனங்களுக்கு மிடமுண்டு. புதியதெதையும் தொடங்க வேண்டாம். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

பிரகடனம்

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00,

☞ செந்தமிழ் மொழிவளம்: எங்கள் தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும்பயிற்றுவது; தமிழ்ஆங்கில ஆரம்ப மாணவர் தொடக்கம் S. S C. மாணவர் தமக்கும் இன்றியமையாதது; பண்டிதர் ம, வே. திருஞானசம்பந்தப்பிள்ளை புதிய முறையில் இயற்றியது. விலை: 1—60 சதம்.

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

சிவராத்திரி விரத மான்மியம் (வசனம்) விலை சதம் 25.

அரிச்சந்திரபுராணம்-மயானகாண்டம் பண்டிதர் ம வே. தி.ச. எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது [இலங்கை அரசினர் பாடபுத்தக பரிசீலனைச் சபையாரின் அங்கீகாரம பெற்றது.] விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—25 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலதேசாந்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1-00

• சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அஞ் 10)

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarpannai, Ja'fna

தானவரவு

சைவப்பெரியார் திரு. க. சிவபாதசுந்தரமவர்களின் ஆட்டைத் திவசம் சென்ற செவ்வாய்க்கிழமை (3-8-54) நடைபெற்றபோது அவரது மருகர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையால், யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 5/= பெற்றும்,

மனேஜர்.

M. 105 6—8—54.

அறிவித்தல்

பெயர் மாற்றம்

இத்தால் அரசாங்கத்தினர்க்கும் பொதுசனங்களுக்கும் அறியத்தருவதாவது: வண்ணார்பண்ணை காகேயன்துறை றோட் 415ம் இலக்க இல்லத்திலிருக்கும் கந்தையா மகள் அல்லது பரமநாதன் பெண் செல்வநாயகி ஆகிய நான் இன்றுவரையில் கந்தையா மகள் செல்லம்மா என்று வழங்கப்பட்டுவந்தேன். 26-7-54 தொடக்கம் "செல்வநாயகி" என்று வழங்கப்பட்டு, ப. செல்வநாயகி என்று கையொப்பமிடுவேன்.

(ஒப்பம்) ப. செல்வநாயகி

M 106 6-8

பொதுக் கூட்டம்

உடுவில் கிழக்கு கற்பகவிநாயகர் சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் செனட்டர் பி. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திருவாளர்கள் வி. பொன்னம்பலம், பண்டிதர் எம். சின்னத்தம்பி, திரு. எ. மகாதேவா, பண்டிதர் ஆர் திருநாவுக்கரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புதுவையிலொன்று பாரிசிலொன்று

பிரெஞ்சிந்தியப் பகுதிகளை விட்டு 14-8-54 ல் பிரெஞ்சுக்காரர் வெளியேறுவரெனப் புதுவைப் பிரெஞ்சிந்திய அரசாங்க அதிகாரி கூறியிருப்பதாகச் செய்தி ஒருபுறம் வருகின்றது. பிரெஞ்சு வெளிநாட்டுக் காரியாலயத்தார் தங்களுக்கு ஒன்றுந்தெரியாதென்று கூறுகின்றனர் மற்றொருபுறத்தில்.

சுந்தரமூர்த்திநாயனூர் குருபூசை

நாள்: ஜயவரு ஆடி மீ உ௨ (6-8-54) வெள்ளிக்கிழமை

இடம்: சைவபரிபாலனசபை நாவலர் மண்டபம்

நிகழ்ச்சிகள்:

முற்பகல் 9½ — பிற்பகல் 1 மணி கடவுளாராதனை, புராணபடனம் பெரியபுராணம் வெள்ளானைச் சருக்கம், மாகேசுர பூசை.

இரவு 6 — 6½ தமிழ்மறையோதல் திரு V. சுப்பையாவும் அவரது கோஷ்டியாரும்.

இரவு 6½ பிரசங்கம்

சுந்தரர் வாழ்க்கைச்சிறப்பு பண்டிதர் பிரமஸ்ரீ வ மு இரத்தினேசுவர ஐயர்

"சுந்தரரும் சேரமானும" சைவப்பிரசாரகர் திரு பொ. அப்புக்குட்டி

சைவாபிமானிகள் யாவரையும் சமுகமளிக்கும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்

மு. மயில்வாகனம்

சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலனசபை,

யாழ்ப்பாணம், 2-8-54.

M. 101 6—8—54.

வேதாகம சாஸ்திர பாடசாலைக்காக வேண்டுகோள்

இப்பாடசாலை சர்வதாரி வருஷம் கார்த்திகை மாதம் கூ-ந் திகதி (1948-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ந் திகதி) புங்குடுதீவுச் சிவன்கோவில் குருபூசை மடத்தில் ஆரம்பித்து நடாத்தப்பெற்று வருகிறது.

சைவாசாரியர்களும் அபிமானிகளும் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரும் மாதவீதம் உவந்து கொடுக்கும் சந்தப்பணத்தைக்கொண்டு சமஸ்கிருத உபாத்தியாயரின் மாதச் சம்பளமும் பிற செலவுகளும் செய்யப்படுகின்றன.

இப்போது தீவுப் பகுதியிலும் அயலூரிலுமுள்ள 9 பிராமணப் பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இங்குபா, திருநெல்வேலி பிரமஸ்ரீ கே. நாராயணசர்மா வேதாகமசாஸ்திர பாடங்களைப் படிப்பிக்கின்றனர். சித்தாந்த சாத்திர பாடங்களைத் தமிழில் ஸ்ரீ கணபதிப்பிள்ளை வைத்தியர் இலவசமாகக் கற்பித்து வருகின்றனர்.

அயலூரிலுள்ள பிராமணப் பிள்ளைகள் பாடசாலையில் சேர்ந்து படிப்பதற்குப், போசவசதியில்லாமையால் விருந்தும் விடுதிச் செலவு பொறுத்துப் படிப்பதற்குப் பொருளாதாரம் இடங்கொடாமையால் தயங்குகிறார்கள்.

இப்போது பரிபாலனசபையின் தலைவராகத் திரிகோணமலை சிவாசாரியர் சிவஸ்ரீ குபூர்ணானந்தேஸ்வரக் குருக்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்களது நன்முயற்சியின் பெறுபேறாகப் பாடசாலைக்கு நடைபெறுமென்பது நம்பிக்கை.

பாடசாலைக்கு நிரந்தரமான கட்டடம் அமைப்பதற்கு இரத்தினபுரி சிவன்கோவில் அர்ச்சகர் சிவஸ்ரீ சி. வைத்தீஸ்வரக் குருக்கள் நிலம் தருமசாதனம் செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். கட்டடம் பேணுவதற்கும் உபாத்தியாயர் சம்பளத்தைக் காலதாமதமின்றிக் கொடுத்து வருவதற்கும் ஒரு மூலதனம் வேண்டும். எல்லாச் சமயவாதிகளும் தங்களைக் குருமார்கள் மேலாயசலாசாரமும், பண்பாடும் பெறத்தக்கதற்கான வசதிகளைத் தேடிக்கொடுக்கிறார்கள். உயர்ந்த சைவசமயத்தவர்கள் இக்காலத்தில் இக்குறைபாடானவர்களாகக் காணப்படுகின்றனர். இது வருந்தத்தக்க நிலைமையே

இதற்கும் உண்ணு விரதம் தேவையாம்!

பருத்தித்துறை ஆலடி விநாயகர் கோவிலில் நடக்கும் திருவிழாக்களுக்குச்சின்னமேளம் வேண்டுமென்று பிடிவாதஞ் சாதிக்கின்றனராம் ஒருசாரார்! அவர்கள் எவ்வித அறிவுரையும் ஏற்பதாயில்லை. ஆகையால் இத்தொடர்பில் தொண்டு செய்யும் ஒரு சபையார் சின்னமேளத்தை நீக்கும் பொருட்டு உண்ணு விரதம் பூணுதற்கு உத்தேசித்திருக்கின்றனராம்.

சிவகாமி அம்பாள் ஐக்கிய பண்டசாலை

இப்பண்டசாலையின் விசேட பொதுக்கூட்டம் ஒன்றுசங்கத் தலைவர் திரு. க. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் 22-7-54 மாலை நடைபெற்றது. தீவுப்பகுதி ஐக்கியசங்க வட்டாரப்பரிசோதகர் திரு. சவுந்தரராசா அவர்களும் சங்க அங்கத்தவர்கள் யாவரும் சமூகமளித்த[illegible]ர். வட்டாரப் பரிசோத[illegible] அவர்கள் பண்டசாலை [illegible] கூடப்படும் பண்டசாலை[illegible] ஒன்றுப் இருந்த நிலை[illegible]மையும் தற்போதைய முன்னேற்ற நிலையும்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர்கள். சங்க அங்கத்தவர்கள் யாவருக்கும் உரிமையுள்ள காரைநகர் வடக்கிலிருக்கும் 'கெருஞ்சி அடைப்பு' எனனும் வளவில பண்டசாலையின் முன்னேற்றங் கருதி ஓர் பண்டசாலைக் கட்டிடம் நிறுவுதல் என்னும் பிரேரணை அரசினர்க்கு மனுச்செய்யும்பொருட்டுச் சபையில் விடப்பட்டுச் சபையின அங்கீகாரத்துடன் அப்பிரேரணை நிறைவேறியது. முடிவில் தலைவரின [illegible]ன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

இச்சிவ வைபவ ரிபத்தில் பல பொதுமக்கள் சிலர்களாகிய வைகனமக்கள் வணக்கமெடுக்குமபடி இதன்மூலம் விண்ணப்பிக்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலிப்பாராக என்று மேற்படி பண்டசாலைப் பரிபாலன சபையார் ஓர் வேண்டுகோள விடுத்திருக்கின்றனர்.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

——:0:——

1942ம் ஆண்டின் 13ம் இலக்கச் சட்டவேச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் 233 K. K. S. றோடு பெ. அரு. மு முத்துச்சாமிசெட்டியார் அன் சன்ஸ் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்பொழுது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

நம்பர்	உ. மூ. ஞூ	கொடுத்தருபா	ஊர்	பெயர்	நகைகளின் விபரம்
10890	16-10-52	46	நவாலி தெற்கு	சின்னையா தியாகராசா	விலாசம்போட்ட சிகில்மோதிரம் 1
11063	23-10-52	50	நாச்சியம்மன் கோவிலடி	கந்தையா நடராசா	சிலக்கல்லில்லாத தாலி 1
11148	27-10-52	7	சண்டிக்குளி	ஞானப்பிரகாசம் இம்மானுவேல்	தொங்கட்டானும் சில கல்லுமில்லாத இமி வெள்ளைக் கல் காதுக்குச்சி சோடி 1
11252	1-11-52	35	சோனகதெரு	முகையதீனப்துல்காதர் முகமது மீராசாகிபு	தொங்கட்டானில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி 1ம் முரிந்த சங்கிலியும் சிலகல்லுமில்லாத இமி வெள்ளைக்கல தொங்கட்டான் சோடி 2ம் தொங்கட்டானுடன் காதுவாளி 1ம் மோதிரம் 1
11501	14-11-52	25	காவற்துறை	பொன்னர் கந்தையா	ஒன்றுக்குக் கம்பியில்லாத முருக்கு பிள்ளைக் காப்பு சோடி 1ம் சிறு ஆடுதன் மோதிரம் 1
11570	18-11-52	35	இந்துகாலேஜ் ஒழுங்கை	வேலுப்பிள்ளை சண்முகம்	கப்பிக் காப்பு 1
11574	" " "	10	எச்சமோட்டை	முருகேசு கனகரெத்தினம்	மோதிரம் 1
11745	27-11-52	30	ஆனைக்கோட்டை	கந்தையா தருமலிங்கம்	பழுதுமட்டப்பொன் திருகுடன் சிலகல்லிலலாத மழுக்கன் சிகப்புக்கல் காதோலை சோடி 1
11951	9-12-52	20	தாவடி	வேலாயுதர் வீரசிங்கம்	இமி கல் நகைகூடு 1
12010	13-12-52	31	ஆறுகால்மடம்	முருகுப்பிள்ளை நவரெத்தினம்	தாலி 1
12096	18-12-52	4	நல்லூர்	அப்பையா வல்லிபுரம்	இமி வெள்ளை பச்சை கட்டிய தொங்கட்டான் மூக்குத்தி 1
12243	25-12-52	20	மண்டதீவு	சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை	டிம்பியும் சில முத்துமிலலாத இமி கல டிம்பி பதக்கம் 1
12250	" " "	33	மண்டதீவு	சந்தவனம் நாகேந்திரம்	இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1
12314	29-12-52	40	சிவியாதெரு மேற்கு	விநாயகர் கனகரெத்தினம்	தாலி 1
12439	4-1-53	8	காவற்துறை	செல்லையா அந்தோனிப்பிள்ளை	சிறு ஆடுதன பொட்டு 2
12448	5-1-53	35	இருபாலை	இராமலிங்கம் நாகரெத்தினம்	சிலகல்லில்லாத இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1
12708	19-1-53	40	கோப்பாய் தெற்கு	நாகமுத்து சரவணமுத்து	பிள்ளைக்காப்பு சோடி 1
12811	28-1-53	102	நாவலர்றோட்	சப்பையா கந்தசாமி	சங்கிலி 1
12894	28-1-53	120	மாவிட்டபுரம்	இராமலிங்கம் கனகரெத்தினம்	சேர்மானக்கல் ஆடுதன பொட்டு கோர்த்த சங்கிலி 1ம் கிளாவர் மோதிரம் 1
12913	" " "	65	நல்லூர்	இளையதம்பி அம்பலவாணர்	கம்பி மாத்திவிட்ட சில கல்லில்லாத இமி கல புறோச் 1
12996	2-2-53	12	காவற்துறை	செல்லையா அந்தோனிப்பிள்ளை	முருக்கு பிள்ளைக்காப்பு 1
13036	5-2-53	6	கரையூர்	முருகன் சந்தியோ	சிறு சிகில மோதிரம் 1
13249	18-2-53	35	வண்ணைமேற்கு	மாதர் சின்னத்துரை	மோதிரம் 1
13293	20-2-53	41	காவற்றுறைவடக்கு	ரெத்தினம் இலாசிங்கம்	மட்டப்பொன் காட்டுக்கடுக்கன் சோடி 1ம் ஒன்றுக்கு மேல் குண்டு இல்லாத மட்டப்பொன காசுபட்டம் சோடி 1
13299	21-2-53	15	சீராவியடி	நாகமுத்து குமாரசாமி	ஒன்றுக்கு திருகில்லாத காதோலை கட்டைக்கம்பி சோடி 1
13310	21-2-53	40	கஸ்தூரியார்றோடு	சுப்பிரமணியம் செல்வராசா	இமி வெள்ளைக்கல் சிமிக்கி சோடி 1ம் இமி வெள்ளை கீலம்கட்டிய மோதிரம் 1
13330	" " "	20	ஸ்டான்லி றோடு	குருசுமுத்து செபமாலை	சிலகல்லில்லாத இமி வெள்ளைக்கல் தொங்கட்டான சோடி 1
13421	25-2-53	175	இணுவில் மேற்கு	சுப்பையா சின்னத்துரை	சங்கிலி 1

விற்பனவு: ஜய ஞூ ஆவணி மீ 12௳ (28—8—54) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படியாரகள் கடையில் எடுபட்ட நகைகள் புறநீங்கலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை,
8-8-54.

[M 102 6, 13—8—54.]

சி. பசுபதிச்செட்டியார்
வெர்திஸ்மேஸ்தர்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaf fna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday August 61954.